ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

# ஆர்ய தர்மம்.

कोऽर्थान् प्राप्य न गर्वितः विषयिणः कस्यापदोऽस्तं गताः
स्त्रीभिः कस्य न खण्डितं भुवि मनः को नाम राज्ञां प्रियः ।
कः कालस्य न गोचरान्तरगतः कोऽर्थी गतो गौरवम्
को वा दुर्जनवागुरासु पतितः क्षेमेण यातः पुमान् ॥

செல்வத்தை அடைந்தோர்களில் கர்வமில்லாமல் ஒருவருமில்லை. விஷயபோகங்களில் அதிக ஆவல்கொண்டவர்களுக்கு கஷ்டமில்லாமல் எப்படியிருக்கும்? உலகின் கண் எவருடைய மனம் ஸ்திரீகளால் தமக்கு ஸ்வாதீனமாகச் செய்து கொள்ளப்படவில்லை? அரசர்களுக்குப் பிரியமுள்ளவர்களென்று ஒருவரையுங் கூறமுடியாது. காலனென்னும் இயமனுடைய ஆக்ஞையை யாராலும் மறுக்க சாத்தியமில்லை. யாசகவிருத்தியிலிருப்பவர்களுக்குகௌரவ மென்பது ஏது? துஷ்டர்களாகிற வலையில் சிக்குண்டவன் எப்படி க்ஷேமத்தையடைவான்?

இதனால் பொருளை யடைந்த மனிதன் மதங்கொண்டு கர்வத்தை படைந்தால் அவன் சீக்கிரத்தில் அழிவுறுவா னென்றும், விஷய போகங்களில் எப்பொழுதும் மூழ்கியிருந்தால் ஆபத்திற்குள்ளாகி நாசமடைகிறானென்றும், கெட்ட புத்தியையுடைய ஸ்திரீகளிடத்தில் நம்மனம் கட்டுப் பட்டால் கொடிய கெடுதிகளை விளைவிக்குமென்றும், ராஜர்களிடம் அவசியமான சமயங்கள் தவிர மற்ற சமயங்களில் அதிகம் நெருங்கக் கூடாதென்றும், அந்தகனுடைய ஆக்ஞைக் குள்ளாகி பல கஷ்டங்களையனுபவியாமல் அதை விலக்க முயலவேண்டுமென்றும். யாசக விருத்தியானது கௌரவக்குறைவாகையால் அதை நீக்க வேண்டுமென்றும், துஷ்டர்களின் சேர்க்கையானது மிகவும் துன்பத்திற்கிடமாகையால் அதைத்தடுக்க முயலவேண்டுமென்றும் போதிக்கப் படுகின்றது.

# ஸம்ஸ்கிருத பாஷாபி விருத்தி

நாம் இதுகாறும் அயல் நாட்டு நிபுணர்களான அன்னோர்களினபிப்ராயங்களை எடுத்துக் கூறியதின் முக்கிய நோக்கம் நம் பாரதேசத்திற்கு அழிவற்ற பெருமையைத் தரத்தக்க முதுமொழியாகிய இவ்வடமொழியானது எவ்வாறு நம் நாட்டை விட்டகன்று மேனாட்டிலுள்ள பலராலும் நன்காதரிக்கப் பெற்றுள்ளதென்றும், மேற்றிசையில் இப்பாத நடையைப் படிப்போருக்குப் பெரும்புகழும் செல்வமுமிருக்க, அதன் மகிமையையறியாத நம்மவர் அதைப்படிக்கும் சிலபண்டிதர்களைக் கூட இகழத்துணிகின்றனரென்றும் காண்பிப்பதற்கேயாகும். ஆனால் இப்பொழுது சிறிதுகாலங்களாக அதனை பெருமையைப் பிறரிடமிருந்து நாமறிந்து கொள்ளும்படி நேரிட்ட நம்பாஷையின் கண்ணபிமானத்தால் நவத்வீபம் கல்கத்தா காசி முதலிய விடங்களில் தனி வடமொழி கற்கவேண்டி சர்வகலாசாலைகளும் வேறு பாடசாலைகளுமுண்டாயின. ஆயினும், அரசாங்கத்தார் இதையாதரிப்பதில்லையென்று பலர் கொண்டிருந்த எண்ணம், அவர்களிப்பாஷையைப் பள்ளிகளிலும் உப பாஷையாய் வைத்தது முதல், ஒருவாறு ஒழிந்தது. அவ்விதம் வைத்தும் ஆங்கிலபாஷையைப் படிப்பதற்கெவ்விதம் நமது தேசபாஷையில்லாவிடில் முடியாதோ, அங்ஙனமே ஏதேனும் தேசபாஷையில்லாவிடில் இம்மொழியையும் கற்கவியல்வதில்லை. இனி ஒருவன் ஆங்கிலபாஷையை கற்கவேண்டுமென்று ஸம்ஸ்கிருதத்தை யெடுப்பானேல் அவனுக்கு மிகுந்த வருத்த முண்டு. எங்ஙனமெனின், அவன் தேசபாஷை [Mother Tongue] ஆங்கிலம்

ஸம்ஸ்கிருதம், இவற்றைப் படிக்கவேண்டி வருகிறது. ஆத லாற்றான் தேசபாஷை, இங்கிலீஷ், ஸம்ஸ்கிருதம் இம்மூன்றை படிப்பிக்கவாவது அல்லது தனித்து ஸம்ஸ்கிருதபாஷை படிப் பிக்கவாவது பாடசாலைகள் வேறு ராஜதானிகளிலேற்பட்டன. முற்கூறிய இருவழிகளிலும் நமது ஸம்ஸ்கிருதம் இந்த ராஜதா னியில்மட்டில் நமது அதிருஷ்டமின்மையால் உபயோகமற்றொ ழிந்தது. இம்மாகாணத்திலும் ஏதோ ஒன்றிரண்டு பாடசாலைகள் ஏற்பட்டன வெனினும், அவைகளிலாங்கிலசம்பந்த மில்லாதது பற்றி அவைகளுக்கு அரசாங்கத்தார் அதிக உதவிபுரியவில்லை. பிறகு ஏதோ அற்ப அதிருஷ்டவசத்தால்தனிஸம்ஸ்கிருதம் படி ப்பித்தாலும் அவர்களுக்கு உதவிசெய்வதாய் ஆதரவுள்ளசெ ன்னை கவர்மெண்டாரால் வெளியிடப்பட்ட உபகாரச்சட்டமா னது ஸம்ஸ்கிருத பாஷாபிவிருத்திக்கு ஓர் ஊன்றுகோலாயிற் றென்றாலும், இச்சமிஸ்கிருதப்படிப்பானது அதிகலாபகரமாகத் தோன்றவில்லையாதலால், மாணுக்கர்கள் ஆங்கிலத்தையே பெரி தும் அப்யஸிக்கின்றனர். ஆயினும், இக்காலத்திலும் ஏதோ சிற்சிலர், இவ்வடமொழியின்பெருமையையுணர்ந்து அதையே படிக்கின்றனர். இதுவுமன்றிஎதிர்கால நிலைமையையுற்று நோக் கின், நமது ஸம்ஸ்கிருத பாஷை முன்னேற்றமடைவதற்குரிய இரண்டு ஸாதனங்களிருப்பதாய் நன்கறியலாம். அவைகளுள் பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்தை நாடி ராஜீயஸ்தானங் களை அவர்களுக்கே அதிகமாயளித்து அவர்களை சீர்தூக்கிவிட வேண்டுமென்ற நம் கவர்மென்டாரின் நோக்கம்ஒன்று (இது ஆங்கிலத்தில் Non-Bramin Preference என்று வ்யவகரிக்கப் படும்)! தற்காலம் படிப்பு இலாகாவின் நிர்வாக மந்திரியான கனம் பத்ரோ(Hon. Mr. Patro அவர்களால் கொண்டுவரப்பட் டதும் சட்டமாய் அங்கீகரிக்கப் பெற்றதுமான யூனிவர்ஸிடி மசோதா(University Bill)மற்றொன்று. இவ்விரண்டும் ஜனங் களுக்கும் பெரும் இன்னல்களை விளைவிப்பதெனத் தோன்றினு லும் ஆராய்ந்து பார்க்குமளவில்மிக்க நன்மையைப் பயக்குவ னவென்பதற்குச் சந்தேகமில்லை. (தொடரும்)

॥ ॐ तत् सत् ॥

# ॥ श्रीशंकरसभावर्षोदंतः ॥

**सदाशिवसमारंभां शंकराचार्यमध्यमां ।**
**अस्मदाचार्यपर्यंतां वंदे गुरुपरंपराम् ॥**

அத்வைதமதாபிமானிகளான ஆஸ்திகர்களே !

இவ்வுலகில் ஜீவராசிகளின் நற்கதியைக்கருதி, கருணாநிதியான ஸர்வேசுவரன், கலியின் மகிமையால் நாஸ்திக மதங்கள் பரவி ஆஸ்திகமதங்கள் மறைந்து வைதிக தர்மங்கள் க்ஷீணித்திருப்பதைப்பார்த்து, தேவதைகளால் பிரார்த்திக்கப் பட்டு, கேரளநாட்டில் காலடி கிராமத்தில் ஸ்ரீ சங்கரபகவத்பாதாசாரியர்களாய் அவதரித்து, துர்மதங்களைக்கண்டித்து, பிரஸ்தானத்ரய பாஷ்யங்களாலும் அநேக பிரகரணங்கள் மூலமாயும் வைதிகதர்மங்களின் கருத்தையும் அத்வைத தத்வத்தையும் அதிகாரிகளுக்குத் தகுந்தபடி உபதேசம் செய்து, நம்மை அநுக்கிரகித்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட நமது ஸ்ரீ பரமாசாரியர்களின் கிரந்தங்களின் தாத்பரியத்தை சிரவணம் செய்து சிரேயஸ்ஸை யடையவேண்டுமென்று, சென்ற பிங்கள௵ சித்திரை௴ 14௳ குருவாரம் முதல் துர்மதி௵ சித்திரை௴ 30௳வரையில் நடந்துவந்த ஜயந்தி உத்ஸவத்துடன் பிரதி குருவாரத்திலும் மற்ற சிலவாரங்களிலும், மாலை 6—30 மணிமுதல் 8—மணி வரையிலும், எனது வித்யாசார்யாளான வித்வத்ரத்னம் பண்டித பிரும்மஸ்ரீ நீலகண்டசாஸ்திரிகள் அவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் ஸம்பிரதாயமாய் வேதாந்த சாஸ்திரத்தைக் கற்றுணர்ந்த வித்வான்களின் உதவியால் துன்மதி௵ சித்திரை௴ 30௳-முதல் துந்துபி௵ சித்திரை௴ 19௳வரையில் ௵ 1க்கு நடந்த உபந்யாஸங்கள் 59 அதற்குப் பிறகு

நாளது ௵ சித்திரைமீ 9௳ வரையில் அடியில்கண்ட விவரப்படி 83-உபந்நியாஸங்கள் எனது கிருஹத்தில் பரமாசார்யாளின் ஸந்நிதியில் நடைபெற்றன.

ஷை உபந்யாஸங்களுக்கு அத்வைத மாதாபிமானிகளான ஆஸ்திகர்கள் அநேகர் சிரத்தையாய் வந்து சிரவணம் செய்து மிக்க ஸந்தோஷமடைந்தார்கள்

ஷை விஷயங்களை ஸம்பூர்ணமாய் நடத்துவதில் எனக்கு ஸஹாயமாயிருந்த எனது வித்யாசார்யர்களுக்கும், வித்வான்களுக்கும் சுரோதாக்களுக்கும் எனது அநேக வந்தனங்கள்.

ஷை ஸபையானது மேன்மேலும் விருத்தி அடைந்து அத்வைதமதத்தின் தத்வத்தை ஜனங்களெல்லோரும் அறிந்து க்ஷேமலாபத்தை அடைய வேண்டுமென்று ஸர்வேசுவரனை தர்மஸம்வர்த்தனீஸமேத ஸ்ரீ ப்ரணதார்த்திஹரஸ்வரூபியான நமது பரமாசார்யாளைப் பிரார்த்திக்கிறேன்.

குறிப்பு:—ஷை ஸபையில் பிரம்மஸ்ரீ M.R.Ry. குப்புஸாமி சாஸ்திரிகள் அவர்கள், M.A.,L.E.S. (Professor of Sanskrit & Comparative Philology, Presidency College, Madras.) 29—6—22ல் "அத்வைதவைபவம்" என்ற விஷயத்தை மிகவும் சிரவணாநந்தகரமாய் உபந்யஸித்தார்கள்.

## உபந்யாஸங்களின் விபரம்.

| உபந்யாஸகர்களின் பெயர் | விஷயம் | சங்கியை |
|---|---|---|
| 1. பிரம்மஸ்ரீ வேதாந்தரத்நம் விசுவநாதசாஸ்திரிகள் அவர்கள் (தானாதிகாரி புதுக்கோட்டை) | 1. தசசுலோகி 2. ஆசிரம தர்மம் | 17 |
| 2. பிரம்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள் மரூர் (பண்டிட், சமஸ்கிருத காலேஜ் திருவாதி.) | பகவத்கீதை | 40 |
| 3. பிரம்மஸ்ரீ வேதாந்தவிபூஷணம சாஸ்திர ரத்நாகரம் கிருஷ்ணசாஸ்திரிகள் (கருங்குளம்) | ஆசார்யமகிமை | 1 |

4. பிரும்மஸ்ரீ சாமி சாஸ்திரிகள்,(அம்மா ளக்கிரகாரம்) சங்கரவிஜயம் 9
5. பிரும்மஸ்ரீ மேதா ஸ்ரீகவிசேகர பண்டிட் R. நாராயணசாஸ்திரிகள் (ஸம்ஸ்கிருத காலேஜ், திருவாதி) அத்யாஸம் 1
6. பிரம்மஸ்ரீ சேஷாராமசாஸ்திரிகள் சதசுலோகி 3
7. பிரம்மஸ்ரீ வர. அம்பி சுப்ரமண்யசாஸ்திரிகள் உபாஸநம் 2
8. பிரம்மஸ்ரீ சுந்தரேசதீக்ஷிதர் விவேகசூடாமணி 1
9. மற்ற உபந்யாஸங்கள் 8

N.B. நாளது ருதிரோத்காரி-ஸு சித்திரைமீ 9உ (21-4-23) சனிக்கிழமை வைசாக சுத்த பஞ்சமீ தினம் ஸ்ரீஜயந்தி உத்ஸவம் 7-வது தடவை எனது கிரஹத்தில் விமரிசையாய் நடைபெற்றது.

திருவையாறு,
ருதிரோத்காரீ-ஸு
சித்திரைமீ 10உ

शंकरकिंकर:
गोविंदस्वामिभट्टगोस्वामि.

# இந்துதேச வைத்தியம்.

இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு பிராணிகளுக்கும் வியாதி என்பது உண்டு. வியாதியென்றால் தேகத்தின் உறுப்புக்களும், பலவிதமான கருவிகளும், அம்சங்களும் செய்யும் சுவாபாவிகமான தொழில்கள் மாறுபடுதலாம். தமது நிதானக்குறைவினாலும், சீதோஷ்ணவிகற்பத்தாலும், காலவித்தியாசத்தினாலும் அனேகமாய் வியாதிகள் உண்டாகின்றன. ஒருவர் தம் வரை எவ்வளவு ஜாக்கிரதையாய் சுகாதாரவிதிகளை யனுசரித்துநடந்துவந்தாலும் அவருக்கு நோய்வராதென்பதில்லை. பிறாது கவனக்குறைவாலும் ஒருவருக்கு வியாதி வரக்கூடும். வியாதியா

னது சகல ஜீவன்களுக்கும் நிகழக்கூடியதேயாயினும் அதை நிவர்த்தித்துக்கொள்ளும் சக்தி அறிவுடைய மாந்தர்களிடத்தி லேயே யிருக்கின்றது. அது ஜனங்களின் நாகரீகத்திற்குத் தக்கவாறு விருத்தியாய்க்கொண்டுவருவதைப் பார்க்கின்றோம், மனிதர்கள் நீடூழிகாலங்களுக்கு முன் வேடர்களாய்த்திரிந்து கொண்டிருக்கையில் வில்லும் அம்புகளுமே அக்காலத்தில் அவர்களுபயோகித்த ஆயுதங்கள். இவ்வாயுதங்களுடன் சண் டைபோடுகையில், அம்புகள் தேகத்தில் தைத்துக்கொள்ளுமா கையால் அவைகளைப் பிடுங்குவதும், வனவிலங்குகளால் உண் டாகக்கூடிய காயங்களை ஆற்றிக்கொள்வதுமான காரியங்களே ஆதியிலிவர்கள் கற்றுக்கொண்ட முதற் சிகிச்சையாகும். ஆக வே முதன் முதல் மனிதன் செய்துவந்த வைத்தியம் ரணவை த்தியமேயாம். சரீரத்திலேயே இயற்கையிலுண்டாகும் வியா திகளின் சுவபாவத்தையறியவாயினும், அறிந்து பரிகாரம் தே டவாயினும் ஆதியில் அவர்கட்குச்சக்தியில்லையென்றாலும், எ தைத்தின்றால் பித்தம் தீருமென்பதற்கிணங்க பலவாறு பலதே சங்களில் சிதறுண்டு கிடந்த ஆதிகாலத்து ஜனங்கள் தங்கள் வியாதி உபாதியைச் சகிக்கலாற்றாதவர்களாய் கண்ட கண்ட பதார்த்தங்களைப் பரிகாரமாகச் சாப்பிடவாரம்பித்தனர். இவ் வாறு சாப்பிட்டு வந்ததில் பல தேகவுபாதிகளை நீக்கின. பல தேகவுபாதிகளை அதிகமும் படுத்தின. இவற்றை கிரமமாகவு ணர்ந்து, அவர்கள் தேகவுபாதியை நீக்கியவைகளை ஔஷதமா கக் கொண்டார்கள். ஆகவே எந்த தேசத்தாரும் வகைதொ கையாய் ஆதியில் வைத்தியமுறைப்படி வைத்தியஞ்செய்துவந் தார்களென்று சொல்லமுடியாது. மனிதர்களுக்குச் சகலவிஷய ங்களிலும் ஞானம் விருத்தியாக விருத்தியாக வைத்திய ஞான மும் முன்னேற்றமடைய ஆரம்பித்தது. இப்படியே வைத்திய ஞானத்தைக்கொண்டு ஒவ்வொரு தேசத்தாரும் யாவரும் எளி திலறிந்துகொள்ளுமாறு வைத்தியசாஸ்திரத்தை யேற்படுத்தி னார்கள். ஏனைய தேசத்தினரும் ஒரே காலத்தில் அறிவாளிக ளாகி வைத்தியசாஸ்திரஞ்செய்ததாய்க் காண்கிலோம். அது

எப்படித்தான் கூடும்? ஒரு தேசத்தவர் மிருகப்பிராணிகளா யிருக்கும்பொழுதே, மற்றொரு தேசத்தவர் மிகுதியான நாக ரீக மேம்பாடுடன் சகல விஷயாக்ஞானத்துடன் சம்பூர்ண மாய் விளங்கியிருக்கக் கூடுமன்றோ? அவ்வாறே சகலதேயத் தவரும் அறிவிலும் நாகரீகத்திலும் ஏற்றத்தாழ்ச்சியாயிருந்த னர். அறிவில் விருத்தியடைந்தவர்களிடமிருந்து அஃதில் குன்றியவர்கள் கற்றுக்கொண்டுவிருத்தியடைந்திருக்கின்றனர். முதன்முதல் எந்ததேசத்தில் வகைதொகையாய் வியாதியின் சுவபாவங்களும், அவைகளுக்குப் பரிகாரங்களும் கண்டுபிடிக் கப் பட்டனவென்று தற்காலம் ஆராய்ந்து பார்க்குமளவில் அஃது இந்தியாவிலென்றே அடியிற்காட்டும் நியாயங்களால் நன்கு துலங்கும்.

ஐரோப்பியர் அராபியரிடமிருந்து (Arabs) இதர சாஸ்தி ரங்களைக் கற்றுக்கொண்டது போலவே வைத்தியசாஸ்திரங்க ளையுங்கற்றுக்கொண்டதாகச் சாதாரணமாய் மதிக்கப்படுகின் றது. ஆகவே அராபியர் (Arabs), கிரெக்கர் (Greeks), முதலி யவர்களின் வைத்தியசாஸ்திரோற்பத்திகாலத்தைப் பற்றிச்ச ற்று கவனிப்போம். அராபி வைத்தியசாஸ்திரங்களைக் கடை சியா யெழுதியவர் "ஆல்பாதர்" என்றும், இவரது மரணகா லம் கி. பி. 1248 ம் வருஷம் என்றும் தெரியவருகின்றது. ஆனு ல் ஆராபியர் கிரேக்கர் பாஷையினின்று தத்துவம், கணிதம், வானசாஸ்திரம் வைத்தியம் முதலிய கிரந்தங்களைத் தங்கள் பாஷையில் மொழி பெயர்த்ததின் காலம் கி. பி. 745ம் வருஷ மென்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. இந்தக் காலமானது முன்சொன்ன அராபி சாஸ்திரி "ஆல்பாதரி"ன் மரணத்திற்கு 500 வருஷங்களுக்கு முந்தியதா யிருக்கின்றது. கிரேக்கர்க ளுக்குள் வைத்தியசாஸ்திரத்திற்குப் பிதாவென்று சொல்லப் படுபவர், கிரிஸ்து பிறப்பதற்கு 400 வருஷத்திற்கு முன்னரே இறந்துபோனதாகத் தெரியவருகிறது. ஆகவே கிரேக்கரில் வைத்தியசாஸ்திரம் கி. பி. 400 வருஷத்திற்கு முந்தியாரம்பித் ததாகவும் கி. பி. 745ம் வருஷத்தில் அராபியர் கிரேக்கரிடம்

வைத்தியசாஸ்திரம் கற்றுப் பிறகு விருத்தியடைந்ததாகவும் காலவரையுடன் ஒருவாறு தெரிந்துகொள்கின்றோம். தேச சரித்திரங்களில் நேரே எவரும் இந்தியாவினின்று கற்றுக்கொண்டதாய்ச் சொல்லாவிடினும் பரிசோதித்துப் பார்ப்பவர்களுக்கு நமது பாரதநாடே இதரதேசங்களுக்கு வைத்தியசாஸ்திரம் கற்பித்தது என நன்கு தெரியவரும். கறிமஞ்சள், காசுக்கட்டி, அரத்தை, சந்தனக்கட்டை, பாக்கு, லவங்கப்பட்டை முதலிய அனேக சாமான்கள் பூர்வீக காலமுதல் "கிரீஸ்" முதலிய தேசங்களுக்கு இந்தியாவினின்றும் ஏற்றுமதியாயினவாக வியக்தமாய் ஏற்படுகின்றது. அன்றியும், அவைகளில் பலவற்றை அத்தேசத்திலும் ஔஷதங்களாக இத்தேசத்தைப் போலவே உபயோகப்படுத்தியு மிருக்கின்றனர். அவர்களுடைய வைத்தியநூற்களிலும் இவை மருந்துகளாகக் குறிக்கப்பட்டுள்ளன. மேற்குறித்த சரக்குகள் யாவும் இந்துதேசத்தவைகளே. அதுவுமன்றி "பைபிலை" க்கொண்டே இந்தியாவிற்கும் மேற்றிசைக்கும் போக்குவரவு இருந்ததெனரூபிக்க ஆதாரங்கள் பல உள. லவங்கப்பட்டையைப் பற்றிப் பைபிலில் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதுமாத்திரமல்ல. தங்கம், வெள்ளி முதலிய உலோகங்கள் அயல்தேசத்திற்குப் போய்க்கொண்டிருந்ததாகவும் சொல்லப்படுகின்றன. லவங்கப்பட்டையைப்பற்றி பைபில் அகராதியைப் பார்த்தால் "இந்தியாவினின்று வந்த சரக்கென" வியாக்கியானம் பண்ணியிருப்பதைப் பார்க்கலாம். இந்து தேசத்து வைத்திய குணபாட புஸ்தகத்திலுள்ள ஔஷதங்களை "கிரீக்" "அராபி" பாஷை குணபாடங்களில் கண்டிருப்பதாலும் அத்தேசத்திய குணபாடங்களிலுள்ள இதரபதார்த்தங்களை இந்து வைத்திய குணபாடங்கள் குறிப்பிடாமையாலும் அராபியர், பாரசீகர், கிரேக்கர் முதலியவர்கள் இந்துதேச வைத்திய புஸ்தகங்களைத் தங்கள் பாஷைகளில் மொழிபெயர்த்துக் கொண்டிருக்கின்றமையாலும், இந்துதேச வைத்தியமே புராதனமும் பிறதேசங்களுக்கு வைத்தியங்கற்றுக்கொடுத்தது மாமென்க.

இது நிற்க, "சரகம்" "சுஸ்ருதம்" ஆகிய இவ்விரண்டு நூல்களும் நம் தேச வைத்தியப் பிரதான நூல்கள். அவைகளின் காலம் கிரீஸ் (Greece) வைத்தியக்கிரந்தங்களின் காலத்திற்கு அனேக நூற்றாண்டுகளுக்கு முந்தியதாகவிருக்கின்றது. ப்ரொபஸர் வில்ஸன் (Professor Willson) என்பவர், உலகத்தில் "சரகம்" முதன்மையான வைத்திய கிரந்தமென்றும், "சுஸ்ருதம்" இரண்டாவதென்றுங் கூறியுள்ளார்.

முதன்முதல் ரசாயனத்தை அராபியர் கண்டுபிடித்ததாகவும், அதை ஐரோப்பியர் அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டதாகவும் சாதாரணமாய் மதிக்கின்றார்கள். இஃது வைத்திய சாஸ்திரத்தின் ஓர் அங்கமாகையாலும் அராபியர் முதல் கண்டுபிடித்தாரென்று கூறுவதால் நம்மவர்கள் அதை அராபியரிடமிருந்து கற்றுக்கொண்டதாக ஏற்படுமாதலால், அதைப் பற்றி நாம் இங்கு சிறிது ஆராய்வோம்.

கி. பி. 7-வது 8-வது நூற்றாண்டில் வசித்தவராய் மதிக்கப்படும் "கிபா" என்னும் முதல் அராபிரசாயன சாஸ்திரியார், தாம் ரிஷிகளிடமிருந்து ரசாயனத்தைக்கற்றுக்கொண்டதாகத் தெரிவித்திருப்பதைக் காணலாம். இந்த ரிஷிகள் இந்துதேச ரிஷிகளாயிருக்க வேண்டுமென மதிக்கப்படுகின்றது. ஏனெனின், முதல்முதல் அராபியர் கண்டு பிடித்ததாகக் கூறப்படும் ரசாயன பதார்த்தங்களெல்லாம், முன்னரே இந்துக்களுக்குத் தெரிந்திருக்கின்றன. உதாரணமாக சமுத்திரத்தினின்றெடுக்கப்படும் சாதாரண உப்பும் பஞ்சாப் (Punjab) பாறையினின்று எடுக்கப்படும் (Rock Salt என்னும்) இந்துப்பும், பெரியகாரம் டங்காரமென்றழைக்கப்படும் வெண்காரமும், வெடியுப்பென்று வழங்கப்படும் பொட்டிலுப்பும் சீனக்காரமென்ற படிக்காரமும், நவசாரமும், கல்கிளிஞ்சல் முதலியவைகளினின்றெடுக்கப்படும் சுண்ணாம்பும், கரியும், கந்தகமும், இந்துக்கள் அளவிட்டுச் சொல்ல முடியாதகாலமுதல் அறிந்து கையாண்டு வந்தவைகளாயிருக்கின்றன. மேலும் தங்கம், வெள்ளி, இரும்பு ஈயம்,

தகரம் முதலியலோகங்களையும் தாராளமாகக் கையாண்டு வந்திருப்பது எவர்களும் மறுக்கவொண்ணாத விஷயமாகும். அன்றியும் இவர்கள் கரைத்தல், சுண்டவைத்தல், அதிஉஷ்ணத்தில் வாட்டுதல், பதங்கமாக்குதல் வாலையிலிட்டு வடித்தல் முதலிய ரசாயன அம்சங்களை மிகவும் நன்றாயறிந்தவர்களாம்.

வாலையிலிட்டு வடிப்பதை இந்துக்கள் தாம் முதன் முதல் கண்டுபிடித்ததாக "மிஸ்டர் ஹட்சட்" என்பவர் கூறுகின்றார். இன்னும் ரசாயன உதவியால் செய்யக்கூடிய (Bleaching) வெள்ளாவிவைத்தல், (Dying) வர்ணமிடல், (Tanning) தோல் பதமிடல்,(Soap and Glass making) சவுக்காரமும் கண்ணாடியும் செய்தல் முதலிய அனேகத் தொழில்களைச் செய்து வந்திருப்பதாய் நாம் அறிகின்றோம். "வெடிமருந்துகளையும், வாணவேடிக்கைகளையும் முதன் முதல் கண்டுபிடித்த பாத்யதையானது அடிக்கடி அவர்களுக்கே அளிக்கப்பட்டிருக்கின்றது. (The invention of Gunpowder and of fire— works has often been assigned to them) என்று டாக்டர் ராயல் (Dr. Royale) கூறுகின்றார். பூர்வகாலத்தில் இந்துக்கள் பஞ்ச உலோகங்களிலும் செய்துவந்த வேலைகள், மிகவும் நாகரீகம் பெற்ற இக்காலத்தவரும் கொண்டாடத்தக்கதேயாம். எஃகில் நம்மவர்கள் செய்த வேலையானது அன்னியதேசத்தினர்களுக்குப் பொறாமை யுண்டாக்கக் கூடியதாக விருந்தது. பாரசீகதேசத்தில் "இந்தியாக் கத்தியாலுன்னை வெட்டுவேனென்ற" பழமொழியொன்று வழங்கிவந்ததுண்டு. தங்கம் வெள்ளி முதலிய லோகங்களில் இவர்களதி நுட்பமாய்ச் செய்யும் வேலையை தற்காலத்திலும் அயல் தேசத்தவர்களால் செய்ய முடியவில்லை.

பல்வேறு தேசத்தினர்கள் ஔஷதங்களாகக் கந்தமூலபதார்த்தங்களையுபயோகித்து வந்தார்களெனினும் தங்கம்வெள்ளி தாம்பிரம் ஈயம் இரும்பு முதலிய உலோகங்களை, உள்ளுக்கு முதல் முதல் உபயோகித்தவர்கள் இந்துக்களேயாம். ஐரோப்

பாவில் ரசத்தை முதலில் உள்ளுக்கு உபயோகித்த வைத்யர் கி. பி. 15ஆவது நூற்றாண்டிலிருந்ததாக லீகிளர்க் (Le clerc) என்பவர் கூறியுள்ளார். மிகபூர்வீகமாயுள்ள இத்தேசக்கிரந்தமாகிய சரகத்திலும் சுஸ்ருதத்திலும் அனேக உலோக பதார்த்தங்களை உள்ளுக்குக் கொடுக்கும்படி கண்டிருக்கின்றது. அயத்தை பலஹீனத்திற்கும், வீக்கத்திற்கும், வெள்ளை பாஷாணத்தை பெருவியாதி முதலிய சர்மலோகங்களுக்கும் முறைக்காய்ச்சலுக்கும் இந்துக்கள் உபயோகப்படுத்தியிருக்கின்றனர். ரசத்தையும் பற்பல விதமாய்ப் பற்பல வியாதிகளுக்குக்கொடுக்கும்படியுங் கண்டிருக்கின்றது.

இதனால் ரசாயனத்தை அராபியர் முதல் முதல் கண்டுபிடித்தவர்களென்று கூற நியாயமில்லையென ஒருவாறு வெளியாயிற்று. பாரசிகர் அராபியரிடமிருந்தும், இந்துக்களிடமிருந்தும் கற்றுக்கொண்டார்களென்பதை எவருமே ஒப்புக்கொள்கிறார்கள். சைனதேசத்தில் முதல் முதல் "சாங்கி" (Chanke) என்னும் வைத்திய புத்தகம் கி. பி. 229 வருடத்தில் உண்டானதாய்த் தெரியவருகின்றது. அதற்கு முந்தியே வைத்தியக் கிரந்தங்களில் மருந்தின் முறையே கிடையாது.

திபத் (Tibet) தேசத்தவரும் பின்னால் இந்துக்களிடமிருந்து வைத்தியங் கற்றுக்கொண்டதற்குத் தக்க அத்தாட்சியிருக்கின்றது. தற்கால ஐரோப்பியவைத்தியத்திற்கு ஆதாரமாயிருந்த அராபி, கிரீக் வைத்தியங்களுக்கும் ஆசியாவிலுள்ள சைன, பாரசிகம் முதலிய தேசவைத்தியங்களுக்கும் முன்பட்டிருந்ததும், அதுகாரணமாக உலகத்திற்கே முதல் வைத்தியமாயிருந்ததும் நம் தேசவைத்தியமேயாம். ஆகவே நம் தேசவைத்தியமானது மிகப்புராதனமாயும் பிறரெவராலும் கற்பிக்கப்படாத சுயமாயு மிருக்கின்றது.

இத்தேசவாசிகளாகிய இந்துக்கள் எவ்வளவு வருஷ காலமாய் வைத்திய சாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்து வந்திருக்கிறார்களென்று கண்டுகொள்வது கஷ்டமே. இந்துக்களுடைய

மூல வைத்திய சாஸ்திரத்திற்கு ஆயுர்வேதமென்று பெயர். இஃது அதர்வணவேதத்தில் ஓர் பாகமாகும். ஆதியில் வைத்தியசாஸ்திரம் பிரும்மதேவராலேயே கொடுக்கப்பட்டதாகச் சொல்கின்றார்கள். பிரமதேவர் தக்ஷப்பிரஜாபதிக்குச் சொன்னதாகவும் அவரிடமிருந்து சூரியபுத்திரர்களான அசுவினிதேவர்களிருவர் கற்றுக்கொண்டு தேவவைத்தியர்களாக விளங்கியதாகவும் புராணங்கள் கூறுகின்றன. இவ்வசுவினி தேவர்களிடமிருந்து இந்திரன் கற்றுக்கொண்டதாகவும், இவ்விந்திரன் தன்வந்தரிக்குப் போதித்ததாகவும், பின்னர் தன்வந்தரியிடமிருந்து ஆத்திரேயரும், ஆத்திரேயரிடமிருந்து பரத்வாஜரும், பரத்வாஜரிடமிருந்து சரகரும் முறையே இவ்வித்தையைக் கற்றுக்கொண்டதாகவும் சொல்லுகின்றார்கள். விசுவாமித்திரரின் குமாரரான சுஸ்தரும் தன்வந்தரியின் சீடரென்றும் சிலர்களினபிப்பிராயம், சரகர் செய்த சரகமும், சுஸ்தரியற்றிய சுஸ்ருதமும் தற்காலத்திலும் இருக்கின்றன. ஆயுர்வேதம் இப்பொழுது அகப்படுவதில்லை. அதில் சொல்லியிருந்ததில் சிலவற்றை மாத்திரமே சிற்சிலர், தங்கள் நூற்களில் ஆங்காங்கு மேற்கோளாயெடுத் தெழுதி யிருக்கின்றனர். சரகம், சுஸ்ருதம் ஆகிய இவற்றுள் சரகமே முந்தியது. பிறகு ரிஷிகள் இவ்விரண்டு கிரந்தங்களையும் படித்து அனேக நூல்களை இயற்றினார்கள். சரகத்தை யனுசரித்தவர்கள் காயவைத்தியர்களாகவும் சுஸ்ருதத்தைப் பின்பற்றியவர்கள் சாஸ்திரவைத்தியர்களாகவுமானார்கள். பின்னர் அனேகர் பற்பல பாஷைகளிலும் பற்பல கிரந்தங்களைச் செய்தார்கள். தமிழிலும் அகஸ்தியர், தேரையர், திருமூலர், காலாங்கநாதர், தர்மசௌமியர், போகர், கொங்கணர் முதலிய பல கவிவாணர்கள் அனேக அரிய நூற்களைப் பிரபந்தங்களாக வெளியிட்டனர். இக்கிரந்தங்களை நோக்குமிடத்து முற்காலத்து வைத்தியர்கள் வியாதிகளின் சுவபாவங்களையும், அறிகுறிகளையும், சிகித்ஸாவிதிகளையும் நன்கறிந்திருக்கவேண்டுமென்று உறுதியாய்க் கூறலாம். அன்றி ரண வைத்தியத்திலும் பண்டையகாலத்திய நம் முன்னோர்கள்

நன்கு தேர்ச்சிபெற்றிருந்தனரென்றும் அனுமானிப்பதற்குப் போதுமான ஆதாரங்களிருக்கின்றன. சுஸ்ருதமானது வைத்திய விஷயமாய் ஆறுபாகங்களைக் கூறுகின்றது. அவையாவன, ஸூத்திரஸ்தானம் (ரணவைத்திய ஞானம்), நிதானஸ்தானம் (வியாதி நிதானங்கண்டறிதல்), சரீரஸ்தானம் (அங்கசாஸ்திரம் சிகித்ஸாஸ்தானம் (மருந்துப்ரயோகம்), கல்பஸ்தானம்(மாற்று Antidote), லோகவிஸ் உத்திரஸ்தானம் என்ற இவைகளே. இந்துக்கள் ரண வைத்தியத்தில் மிகவும் தேர்ச்சிபெற்றிருந்தார்களென்பது அடியிற்காட்டும் நியாயத்தால் விசதமாகும். ரணவைத்தியத்தில் எட்டுப்பாகங்களை அவர்கள் எடுத்துக் கூறியிருக்கின்றனர். சேதனு (Cutting or Scission), பேதனு (Division or Excision), லேகனு (Drawing lines), வியாதனு (Puncturing), ஏஷியம் (Probing or Sounding), ஹாரியா (Extraction of Solid bodies), விஸ்ராவனு (Extraction of Fluids including Vinesection), ஸேவனு (Stitching) ஆகிய இவைகளாம். இவைகளை யடியிற்கண்ட உபகரணங்களால் செய்ததாய்த் தெரியவருகின்றது. யந்திரம், சாஸ்திரம், க்ஷாரம், அக்கினி (சூடுபோடுதல்), சலாகா (Pins) ஸ்ரிங்கா,(Cupping Vessels), ஜலூகம் Leeches அட்டை)இவ்வுபகரணங்கள் மாத்திரமன்றி மற்றும் ரணவைத்தியஞ்செய்வதற்காக அவர்களிடம் நூற்றிருபத்தேழு ஆயுதங்கள், சுத்தமாயும் அழகுபொருந்தியவைகளாயும், மிகக் கூர்மையுள்ளனவாயுமிருந்தன. மயிரை நீட்டுப்போக்கில் அறுக்ககூடிய அவ்வளவு கூர்மையுள்ள ஆயுதங்களிருந்ததாய்த் தெரிகின்றது. கர்ப்பப்பையிலிருக்கும் பிள்ளைகளை ஆயுதப்பிரயோகஞ்செய்து எடுத்தாகவும், மூத்திரப்பையிலிருக்கும் "அஸ்மரி" ரோகக்கல்லுகளையும் ஆயுதத்தால் கீறி வெளிப்படுத்தியதாகவும் தெரியவருகின்றது.

இவ்வாறு ரணவைத்தியத்தில் மிகத்தேர்ச்சியடைந்தவர்களும் அதற்குற்ற மிகநுட்பமான கருவிகளின் ஸாதனத்தால் மிகச்சாதுரியமாகச் சிகித்ஸை செய்தவர்களும், இதுவுமன்றி

இதுஸம்பந்தமான மிக உயர்ந்த கிரந்தங்களை இயற்றவல்ல பேரறிவும் பெற்றவர்களுமான நம் பிராசீன இந்துதேச வைத்திய சிகாமணிகளுக்கு, மேற்சொன்ன ரணவைத்தியத்தில் ஞானமில்லையென்று கூறுவது என்ன புத்திஹீனம்? தற்காலம் ஆங்கில முறையில் படித்து பிரஸித்திபெற்ற வைத்தியர்கள் (English Doctors) இவ்விரண வைத்தியத்தில் (ஆங்கிலத்தில் இது Surgery என்று வியவகரிக்கப்படும்) மிகவும் சூரர்களாக விளங்குகின்றார்களெனினும், அத்தகைய சாஸ்திரமானது நம் முன்னோர்களுக்குத் தெரியாது என்று எவ்வாறு கூறமுடியும்?

(தொடரும்.) இந்து வைத்தியாபிமானி

# தலையூர் அத்வைத வித்யாசாலை.

वेदव्यासस्य इह दश यो वेद वेदाक्षराणि
श्लोकं त्वेकं परिपठति यः सः स्वयं जीव एव ।
आपस्तम्बस्य किल कलयेत्सम्यगौपासनं यः
कष्टं शिष्टक्षतिकृति कलौ कार्यमृच्छन्ति विप्राः ॥

என்கிறபடி சிஷ்டர்களுக்குக்குறைவு ஏற்படக்கூடியகாலமாகிய இக்கலியில் ஸகலதர்மகர்மானுஷ்டானங்களும் ஸகலவித்தைகளும் குறைவடைந்து விட்டதைப்பார்த்து கும்பகோணம் நிவாஸிகளான ஸ்ரீமத் ஜகத்குரு சங்கராசார்யஸ்வாமிகளவர்களால் ஜகத்க்ஷேமத்தை உத்தேசித்து,

"कावेरीवारिपूरेण वर्धितक्षेत्रशालिषु ।
चोळेषु द्विजधामास्ति पुरं श्रीमुखसंज्ञकम्" ॥

என்று அகஸ்திய மஹாமுனியவர்களால் சொல்லப்பட்ட ஓர் உத்தம சிவக்ஷேத்திரமாகிய நன்னிலம் தாலூகா தலையூர் கிராமத்தில் ஓர் அத்வைத வித்யாசாலை ஏற்படுத்தப்பட்டு அதற்கு கீழ் கையொப்பமிட்டிருப்பவரை கார்யதர்சியாக நிய

மித்து 2—2—1922 முதல் ஷடி வித்யாசாலே நடத்தப்பட்டு வருகிறது. அதற்கு வேண்டிய திரவ்யஸஹாயங்களை பிராம் மணர்களிடமிருந்து மாத்திரம் வசூலித்து ஈசுவரகிருபையால் ஷடி வித்யாசாலே இடையூறின்றி நடைபெற்று வருகிறது. அதற்காக சென்ற வருஷத்தில் ரூ 678—4—0 வசூலாகி ரூ. 675—4—11 செலவாகி ரூ. 2—15—1 பாக்கி இருப்பதாக வருஷாந்தர ரிபோர்ட்டும் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தக் கணக்குகள் சரியானபடி வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதெ ன்று கவர்ன்மெண்ட் ஆடிடர் மகா-ா-ஸ்ரீ M. R. பாலசுப்பிர மணியய்யர் அவர்களால் ஆடிட் செய்யப்பட்டிருக்கிறது. ஷடி வித்யாசாலேயில் சென்ற வருஷத்தில் ரிபோர்ட்டில் கண்ட புஸ்தகங்கள் 8ம் பிறகு இவ்வருஷத்தில் இன்னும் அனேகம் புஸ்தகங்களும் வாங்கி வைக்கப்பட்டிருக்கிறது. இதுவிபரங்களைப்பார்த்து ஷடி மஹாஸ்வாமிகளவர்கள் மடத்தி லிருந்து ஷடிவித்யாசாலேயின் அபிவிருத்திக்காக வருஷம் 1க்கு ரூபா 50. கொடுக்கச்செய்வதாக 15—11—21ல் நெ. 379 ஸ்ரீமுகம் கொடுத்திருந்ததை இவ்வருஷம் முதல் ரூபா 100. கொடுக்கச் செய்வதாக 827 நெ. ஸ்ரீமுகம் கொடுத்து அந்தப் படி இவ்வருஷத்திற்கு ரூபா 100 மடத்திலிருந்து கொடுக்கப் பட்டிருக்கிறது. ஷடி வித்யாசாலேயில் நாளது வரையில் ஸூத்ர பாஷ்யம் ஸித்தாந்த லேசஸங்கிரஹம் பிரஹதாரண்யகோபனி ஷத் பாஷ்யமும் பாடம் நடந்திருக்கிறது.

ஆகையால் ஸகல ஆஸ்திகபிராம்மணோத்தமர்களும் இந்த ஸத்கார்யத்தின் அபிவிருத்திக்காக தம் தம் சக்தியனுஸார மாய் திரவ்ய ஸஹாயம் செய்து இந்தவித்யாசாலேயை விசேஷ அபிவிருத்திக்குக்கொண்டுவந்து என்னையும் அநுக்ரஹிக்க வே ணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

K. கிருஷ்ணஸ்வாமி அய்யர்.
கார்யதர்சி, அத்வைதவித்யாசாலே.